மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.145/2021

வாக்குமூலம்: வா.சா.1 சத்யா

04.08.2023: சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமானத்தின்பேரில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:– 1) எனது பெயர் சத்யா என்பதற்கு ஆதரவு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் மானூர் விலாசத்தில் 1998ம் ஆண்டுக்குப்பிறகு குடியிருக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது ஆதார் அட்டையை நான் வழக்கிற்காக வேண்டுமென்றே தாக்கல் செய்யவில்லை என்றும், தாக்கல் செய்தால் உண்மை விபரம் தெரிந்துவிடும் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கும் இறந்துபோன தெய்வநாயகத்திற்கும் எவ்வளவு ஆண்டுகளுக்கு முன்பு பிரச்சனை ஏற்பட்டு பிரிந்து சென்றோம் என்றால் அவ்வப்பொழுது பிரச்சனை வந்தாள் போக வர இருப்பேன். நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் 1998ம் ஆண்டுக்குப்பின்பு தெய்வநாயகத்துடன் வாழாமல் பிரிந்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

2) வாழாமல் 2,3 வாதிளுடன் பிரிந்துவந்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. தெய்வநாயகம் 1ம் பிரதிவாதியை திருமணம் செய்துகொண்டு அவர்களுக்கு 2, 3 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றால் சரியல்ல. திருமணம் செய்துகொள்ளவில்லை. அவர் தன்னுடைய பணிப்பதிவேட்டில் 1ம் பிரதிவாதியை நாமினியாக நியமனம் செய்திருந்தார் என்றால் அது எனக்கு தெரியாது. தெய்வநாயகத்தின் இறப்பிற்குக்கூட நான் செல்லவில்லை என்றால் சரியல்ல. எனது கணவரின் பணப்பலன்களை பெறுவதற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்கோரிக்கைப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

4,5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :– நான் வழக்கிற்கு தேவையான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளதால் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்கள் எங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை.

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.08.04 17:56:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.